

நம் முதலமைச்சர் அவர்களின் கனவுத்திட்டமான “நான் முதல்வன்” திட்டம், தமிழ்நாட்டு மாணவர்களின் கனவுகளுக்கு சிறகு தரும் வகையில் தொடர்ந்து பல்வேறு சாதனைகளை படைத்து வருகிறது. நான் முதல்வன் திட்டத்தின் SCOUT முன்னெடுப்பின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரி மாணவ – மாணவியர் 25 பேர், இங்கிலாந்தின் நியூகேஸ்டல் துர்ஹாம் பல்கலைக்கழகத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்று தாயகம் திரும்பியுள்ளனர். அவர்களை நேற்று முன்தினம் (17.6.2024) அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, இங்கிலாந்தில் அவர்கள் பெற்ற பயிற்சி குறித்தும், அவற்றின் பயன்கள் குறித்தும் கேட்டறிந்தார். ‘நான் முதல்வன் திட்டம்’ அவர்களின் கற்றல் எல்லையை வேறு தளத்துக்கு எடுத்துச் சென்றுள்ளதாக மகிழ்ச்சி தெரிவித்த நம் மாணவர்களை வாழ்த்தி நினைவு பரிசினை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி, மேலும், அவர்களின் அடுத்தடுத்த முயற்சிகளுக்கும் ‘நான் முதல்வன் திட்டம்’ உறுதுணையாக இருக்கும் என்று வாழ்த்தினார்.



கழகத் தலைவர், திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அவர்களின் தி.மு.க. மற்றும் இந்தியா கூட்டணிக் கட்சிகளின் சார்பில், தமிழ்நாடு மற்றும் புதுவையில் 40/40 மாபெரும் வெற்றியைப் பெற்றதை முன்னிட்டு பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினராக வெற்றி பெற்ற கே.ஈஸ்வரசாமி எம்.பி., வால்பாறை சட்டமன்றத் தொகுதி, ஆனைமலை வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட கருப்பம்பாளையம், வக்கம்பாளையம், சிங்காநல்லூர், கெட்டிமல்லன்புதூர், அம்பராம்பாளையம், சுங்கம், சுப்பேககவுண்டன்புதூர், தாத்தூர் ஆகிய பகுதிகளில் தனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியை தெரிவித்தார். கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் முன்னிலையில் நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் கழகத்தின் அனைத்து நிர்வாகிகள், இந்தியா கூட்டணியின் செயல்வீரர்களும், கழக தொண்டர்களும், திரளான பொதுமக்களும் பங்கேற்றனர்.

### வாக்குச்சாவடியைக் கைப்பற்றும் கலாச்சாரத்தைத் தொடங்கியதே ஜெயலலிதா ஆட்சியில்தான்!

# விக்கிரவாண்டியில் டெபாசிட் பறிபோகும் அச்சத்தால் இடைத்தேர்தலைப் புறக்கணித்துள்ளது அ.தி.மு.க.!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

**சென்னை, ஜூன் 19–**

**சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நேற்று முன்தினம் நிருபர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :–**

தமிழ்நாட்டில் வாக்குச்சாவடியை கைப்பற்றும் கலாச்சாரம் தொடங்கியதே அ.தி.மு.க.தான். ஜெயலலிதா ஆட்சியில்தான் இது நடந்தது. நானே பாதிக்கப்பட்டேன். அதில் வேடிக்கை என்னவென்றால் 2,000 ஓட்டுகள் இருந்த இடத்தில் 2,300 ஓட்டுகள் போட்டார்கள்.

பாண்டியன் என்ற தேர்தல் அதிகாரியிடம் நான் புகார் கொடுத்தபோது, “எவ்வளவு ஓட்டு இருந்தது - எவ்வளவு ஓட்டு பதிவாகியிருக்கிறது. இந்த கணக்கை மட்டும் எடுங்கள்” என்றேன். அவர் கணக்கை எடுத்தார். கிட்டத்தட்ட ஆலந்தூர் நகராட்சிக்கு உட்பட்ட 20 பூத்களில் 2,000 ஓட்டுகளுக்கு 2,300, 2,200 என்று பதிவானது.

காரணம் என்னவென்றால், அதிகமான பேலட் பேப்பர் கொண்டு வருவார்கள். அதையும் கைப்பற்றி குத்தி, குத்தி ஓட்டு போட்டார்கள். இதை எல்லாம் செய்தது அ.தி.மு.க. என்பதை மக்கள் மறக்க மாட்டார்கள்.

தேர்தல் கமிஷன் அவர்களிடம் உள்ளது. மாநில அரசிடம் இல்லை. இந்தியா முழுவதும் தேர்தல் கமிஷன் யாருடைய கையில் இருக்கிறது என்பது தெரியும். அந்த தேர்தல் கமிஷன் இருக்கும் போது ஏன் பயப்படுகிறார்கள்.

மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில்தான் எந்த கலவரமும் இல்லாமல் அமைதியாக வாக்குப்பதிவு நடந்து ஜனநாயகம் காப்பாற்றப்பட்டது. இந்த மக்களவை தேர்தலில் அ.தி.மு.க.வுக்கு நிறைய இடங்களில் டெபாசிட் போனது. விக்கிரவாண்டி தேர்தலிலும் டெபாசிட் போய் விடுமோ என்ற பயம். சசிகலா, கட்சியை இணைக்கப் போகிறேன் என்று அறிக்கை விட்டுள்ளார். இந்த சூழ்நிலையில் இந்த தேர்தலை எடப்பாடி புறக்கணித்து விட்டார்.

தேர்தல் புறக்கணிப்பு என்றால் சுட்சியில் உள்ள யாரும் ஓட்டு போடக்கூடாது. நாங்களும் ஒரு கணக்கு எடுக்கப் போகிறோம். அ.தி.மு.க.வினர் ஓட்டு போட்டார்களா என்று. அவர்கள் ஓட்டு போட்டு இருந்தால் அவர்கள் எடப்பாடியைப் புறக்கணித்து விட்டார்கள் என்று அர்த்தம்.



தேர்தலைப் புறக்கணிக்கிறோம் என்று சொல்லியதை மீறி யாராவது ஓட்டு போட்டால் கட்சியை விட்டு நீக்கிவிடுவேன் என்று சொல்லத் தயாரா? சொல்ல மாட்டார்கள். ஏதோ அவர்கள் மறைமுக ஒப்பந்தம் வைக்கலாம் என்று பார்க்கிறார்கள். எதையும் சந்திக்கின்ற ஆற்றல் எங்களுக்கு இருக்கிறது.

வன்னிய பெருமக்களுக்கு கலைஞர், மு.க.ஸ்டாலின் செய்ததைப்போல யாரும் செய்யவில்லை என்பது அவர்கள் எல்லாருக்கும் தெரியும். 20 சதவிகிதம் இடஒதுக்கீட்டை கொடுத்ததே எங்கள் தலைவர் தான். அதன் மூலமாக எத்தனை பேர் டாக்டர், இன்ஜினீயர் ஆனார்கள். எத்தனை பேர் குரூப் 1 சர்வீசில் ஐ.ஏ.எஸ். ஆனார்கள். இதை எல்லாம் அந்த மக்கள் மறந்துவிடுவார்களா என்ன?

ஒன்றை மட்டும் சொல்கிறேன். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாதம் தோறும் மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 கொடுத்த தன் விளைவு, அந்த தாய்மார்கள் எப்படி நன்றியுணர்வோடு வாக்களித்து வெற்றி பெற செய்தார்களோ, அதைப்போல, 20 சதவிகிதம் இடஒதுக்கீட்டால்தான் நாம் இவ்வளவு வளர்ச்சி பெற்றோம் என்பதை உணர்ந்து, ஆயிரம் ராம்தாஸ்கள் சொன்னாலும் மனசாட்சியுள்ளவர்கள், நல்லவர்கள், இதயம் படைத்தவர்கள், வன்னியர்கள் அத்தனை பேரும் தி.மு.க. கூட்டணிக்கு தான் வாக்களிப்பார்கள்.

மக்களவை தேர்தலில் பா.ம.க.வை மக்கள் கைக்கழுவி விட்டார்கள். அவர்கள் சின்னமே இப்போது போய் விட்டது. சென்ற தேர்தலில் ஒரு சின்னத்திற்கு ஓட்டு கேட்டு, இந்த இடைத்தேர்தலில் இன்னொரு சின்னத்திற்கு ஓட்டு கேட்டால் அந்த ஊரில் உள்ளவர்கள் மதிப்பார்களா? எங்களுக்கு அப்படி இல்லை. நாங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவோம்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி கூறினார்.

### ராகுல் காந்தி வென்று - ராஜினாமா செய்யும்

# வயநாடு தொகுதியில் பிரியங்கா காந்தி போட்டி!

## காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அறிவிப்பு!

புதுடெல்லி, ஜூன் 19-

வயநாடு தொகுதியில் ராகுல் காந்தி ராஜினாமா செய்வார் என்றும், அந்தத் தொகுதியில் பிரியங்கா காந்தி போட்டியிடுவார் என்றும், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே தெரிவித்துள்ளார்.



காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே தலைமையில் காங்கிரஸ் கட்சியின் உயர்மட்டக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்குப் பின்னர் கார்கே செய்தியாளர்களிடம் கூறியதாவது:

“ராகுல் காந்தி ரேபரேலி தொகுதி எம்.பியாக தொடர வேண்டும் என்று கட்சி முடிவு செய்துள்ளது. காரணம், இது பல தலைமுறைகளாக அவரது குடும்பத்துக்கு நெருக்கமானதாக உள்ளது. இந்த முடிவையே அத்தொகுதி மக்களும், காங்கிரஸ் கட்சியினரும் சிறந்ததாக கருதுகின்றனர்.

ராகுல் காந்தி வயநாடு தொகுதி மக்களின் மிகுந்த அன்பைப் பெற்றுள்ளதால், அம்மக்களும் அவர் அந்தத் தொகுதியில் தொடர வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால், விதிகள் அதற்கு அனுமதிப்பது இல்லை. எனவே, பிரியங்கா காந்தி வயநாடு தொகுதியில் போட்டியிட வேண்டும் என்று கட்சி முடிவு செய்துள்ளது,” என்றார். இதைத்தொடர்ந்து பேசிய பிரியங்கா காந்தி, “நான் ஒரு பெண். என்னால் போராட முடியும். என்னால் வயநாட்டில் இருந்தும் போராட முடியும்” என்று கூறினார்.

பின்னர் பேசிய ராகுல் காந்தி, வயநாடு எம்பியாக இருந்தபோது, அத்தொகுதி மக்கள் என் மீது காட்டிய அன்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பிரியங்கா காந்தி வயநாட்டில் போட்டியிடுவார். ஆனால், நானும் அங்கு அடிக்கடிச் செல்வேன். அந்தத் தொகுதி மக்களுக்காக கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவோம் என்று கூறினார்.

### குவைத் தீ விபத்தில் உயிரிழந்த

# மாரியப்பன் குடும்பத்தினருக்கு அரசின் நிதி உதவி!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்கினார்!

கோவில்பட்டி, ஜூன் 19 -

குவைத் நாட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் கோவில்பட்டி அருகே வானரமுட்டியைச் சேர்ந்த மாரியப்பன் என்ற இளைஞர் பரிதாபமாக உயிரிழந்தார். உயிரிழந்த மாரியப்பன் அவர்களின் இல்லத்திற்கு நேற்று முன்தினம் (17.06.2024) தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி சென்று அவரது படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அரசின் நிதியுதவி வழங்கினர்.

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளரும், சமூக நலன் - மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதா ஜீவன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன், கோவில்பட்டி நகரசபைத் தலைவர் கருணாநிதி ஆகியோர் உடனிருந்தனர்.

கோவில்பட்டி அருகே வானரமுட்டி கிராமத்தைச் சேர்ந்த வீராசாமி மகன் மாரியப்பன் (41). இவர் கடந்த 20 ஆண்டுகளாக குவைத் நாட்டில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றில் வேலை பார்த்து வந்தார். இவர் குவைத்தின் மங்கஃப் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் இரண்டாவது தளத்தில் அவரது நிறுவனம் ஒதுக்கித் தந்த அறையில் தங்கியிருந்து வேலைக்குச் சென்று வந்தார்.

இந்நிலையில், அந்த அடுக்குமாடி குடியிருப்பில் புதன்கிழமை அதிகாலை 6 வது மாடியில் உள்ள வீட்டின் சமையலறையில் திடீரென தீப்பிடித்தது.

இதனால் பெரும் புகை ஏற்பட்டு குடியிருப்பின் பிற பகுதிகளுக்கும் பரவியது.இந்த தீ விபத்தில் சிக்கி கோவில்பட்டி அருகே வானரமுட்டியைச் சேர்ந்த மாரியப்பன் காயமடைந்தார். அவருக்கு அங்குள்ள மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தது பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

### விக்கிரவாண்டி இடைத்தேர்தல்: அமைச்சர் க.பொன்முடி - எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. தலைமையில்

# கழகக் கூட்டணி வேட்பாளர் அன்னியூர் சிவா வேட்பு மனு தாக்கல்!

## அமைச்சர்கள் – கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்பு!

## மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதம சிகாமணி அறிக்கை!

விழுப்புரம், ஜூன் 19 -

விக்கிரவாண்டி தொகுதி கழக வேட்பாளர் அன்னியூர்.சிவா (எ) சிவசண்முகம் வேட்பு மனு மற்றும் தேர்தல் பணி மனை திறப்பு விழா குறித்து மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர். பொன்.கௌதம சிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துகளைப் பெற்ற விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் இந்தியா கூட்டணியின் வெற்றி வேட்பாளர் அன்



னியூர் சிவா (எ) சிவசண்முகம் இன்று (19.06.2024 - புதன்கிழமை) காலை 9.00 மணியளவில் விக்கிரவாண்டி செட்டிஸ்வரன் கோயில் தெருவில் தேர்தல் பணிமனை திறந்து வைத்த பிறகு அங்கிருந்து ஊர்வலமாக உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் தலைமையில் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர். பொன்.கௌதம சிகாமணி முன்னிலையில் விக்கிரவாண்டி தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், அர.சக்கரபாணி, தா.மோ.அன்பரசன், எஸ்.எஸ்.சிவசங்கர், சி.வெ.கணேசன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கே.எஸ்.மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுடன் விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்யப்படுகிறது.

கழகத் தோழர்கள் மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பெருந்திரளாக இதில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர். பொன். கௌதம சிகாமணி விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

# மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல்

# தேர்தல் முடிவு

## தலைமைக் கழக அறிவிப்பு

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்ட அ.இராஜேந்திரன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால்; திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, ஜூன் 17 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். “ என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கு ஆர்.ராஜசேகர் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவராக,**

**திரு. ஆர்.ராஜசேகர்,** எண்.141, மணியகாரர்தெரு, ரெண்டேரிப்பட்டு கிராமம், போளூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம்-606 803. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 17.06.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### நா. கோதண்டன் தலைமையில்

# ஆர்.கே.நகரில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஜூன் 19–


சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி,40வது வட்டக் கழகம் சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவி வழங்கும் விழா வட்டக் கழக செயலாளர் நா.கோதண்டன் தலைமையில் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ,பகுதி செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், மாவட்ட அவைத் தலைவர் ஆர். வெற்றிவீரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கழக மாணவரணி துணைச் செயலாளர் தமிழ் க.அமுதரசன் சிறப்புரையாற்றினார்.

மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் டாக்டர் கலாநிதி விராசாமி எம்.பி, என்.அனிபா, ஆர்.டி.ராஜா,கே.பாலு, கே.பி.சதீஷ்குமார், மண்டலக் குழுத்தலைவர் நேதாஜி யு.கணேசன், என்.குமாரி எம்.சி,மா.நாகராஜன், என்.எம்.கதிரேசன், ப.குமார், ச.தமிழ்ச்செல்வன், பொ.து.ராஜா, எம்.மருதுகணேஷ், வெ.சு.சத்ய நாராயணன், இர.பொன் இளவரசன், ப.கோதண்டன், எஸ்.கே. இளங்கோவன், எஸ்.பி.எஸ்.புத்தன், பி.சதீஷ்குமார்,என். பிரேமாசான், ஜெ.பிரேம்ஆனந்த், எல்.ரமேஷ், வி.முத்து, பி.அன்பழகன், கே.மோகன், பி.கே.மூர்த்தி, எம்.எம். சாமி, டி.ஆர். தனியாச்சலம், இரா. சீமான், எம்.எஸ்.ரவி, மு.சா.ஹரித்குமார்,கு. கலா,க.ஹேமந்தகுமார், டி.விஜயகுமார், ஆர்.பத்மநாபன், எஸ்.எம்.முருகன், என். டேனியல் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# மா.பா. சாரதி

## ஜூன் 19 (1976)



வடாற்காடு மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும் – மாவட்ட அவைத்தலைவராகவும் பணிபுரிந்தவர்.

வேலூர் நகர்மன்றத்தில் இருபது ஆண்டு காலமாக உறுப்பினராகவும், மூன்று முறை நகராட்சித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றியவர்.

தமிழக சட்டப்பேரவைக்கு இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பத்தாண்டு காலம் சட்டமன்றப் பணிகளை செவ்வனே ஆற்றி, தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி மக்களுக்காக பேரவையில் வாதாடி, குறைபாடுகளை நிவர்த்தி செய்தவர்.

“பெயரால், புகழால், வல்லமையால், செல்வாக்கால், உருவத்தால் யானையென அவர் இருந்தாலும், கழகத்தின் கட்டளையெனும் அங்குசத்துக்கு அடங்கியன்றோ பணி குவித்தார்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**